## தேனி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவில்

## சட்டம் சார் தன்னார்வலராக விண்ணப்பிக்க அழைப்பு

தேனி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு மற்றும் பெரியகுளம், உத்தமபாளையம், போடி நாயக்கனூர், ஆண்டிபட்டி வட்ட சட்ட பணிகள் குழுக்களில் சட்ட உதவி மற்றும் சட்ட விழிப்புணர்வை பொது மக்களுக்கு சேவை மனப்பான்மையுடன் வழங்க விருப்பமுள்ளோர் சட்டம் சார் தன்னார்வலர் பணிக்கு நியமனம் செய்யப்பட உள்ளனர். விருப்பமுள்ளோர் தங்களுடைய பெயர், முகவரி, கல்வித் தகுதி மற்றும் புகைப்படம் அடங்கிய விண்ணப்பத்தை இந்த காலி பணியிடங்கள் குறித்த அனைத்து விரிவான விபரங்கள், விண்ணப்பங்கள் மற்றும் இதர தகவல்களை **https://districts.ecourts.gov.in/dlsa-theni** என்ற இணையதளத்திற்கு சென்று பதிவிறக்கம் செய்து 27.05.2024 தேதி அன்று மாலை 05.00 மணிக்குள் அனுப்ப வேண்டும் என்று ஏற்கனவே செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மீண்டும் தற்போது சட்டம் சார் தன்னார்வலர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் 27.05.2024 தேதியிலிருந்து 31.05.2024 மாலை 5 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இப்பதவிகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தலைவர்/ முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, மாவட்ட நீதிமன்ற வளாகம், இலட்சுமிபுரம், தேனி மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும், கடைசி தேதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என தலைவர்/முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி. **K.அறிவொளி.,M.A.M.L.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**(Sd/-K.அறிவொளி)**
தலைவர் /மாவட்டநீதிபதி,
மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, தேனி

//உத்தரவுப்படி//

R. [signature] 28/5/24

சார்பு நீதிபதி/செயலாளர்(FAC)
மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, தேனி

D.no.1030/2024
Dt. 28/05/2024